ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/53 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/53 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனச் சட்டம்

2 (ஆ) 1 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2(ஆ)1 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டுடன், ஊவா மாகாணத்தின், மொனறாகலை மாவட்டத்தில், இங்கு கீழே அட்டவணை இல. $MO_1$ தொடக்கம் $MO_{49}$ வரை விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை, தாழ்நில, சதுப்புநில, தரிசுநில அல்லது சேற்றுநில ஒதுக்கங்களாக நிச்சயப்படுத்தி பிரகடனம் செய்கின்றேன். இப் பிரதேசத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் போது, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தினால் விதிக்கப்பட்ட கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் கட்டுப்பட்டு செயற்படுதல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர்.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 03,
2014, ஓகத்து 21.

**நிபந்தனைகளும் வரையறைகளும்**

1. இவ்வறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு பிரதேசத்தினுள் உள்ள ஏதேனுமொரு காணியை மீட்பதற்கு (நிரப்புவதற்கு) அல்லது அபிவிருத்தி செய்வதற்கு, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் எழுத்து மூல அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இதற்கு, கூட்டுத்தாபனத்தினால் விநியோகிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தினூடாகவே இந்த எழுத்துமூல கோரிக்கை முன்வைக்கப்படுதலும் வேண்டும்.

2. குறித்த கோரிக்கைகளுக்கு ஏற்ப நகர அபிவிருத்தி அதிகார சபை , மத்திய சுற்றாடல் அதிகார சபை, கமநல சேவைககள் திணைக்களம் மற்றும் இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர், மேலதிக பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (விசேட கருத்திட்டங்கள்), பிரதிப் பொது முகாமையாளர் (காணி/ சந்தைப்படுத்தல்), பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சியும், நிர்மாணங்களும்), பிரதிப் பொது முகாமையாளர் (வடிகாலமைப்பும், காணி மீட்பும்), பிரதான சட்ட அலுவலர் ஆகிய உத்தியோகத்தர்கள் அடங்கிய திட்டமிடல் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட

நிபந்தனைகளுக்கும், நியதிகளுக்கும் அமைவாக இந்த அங்கீகாரம் வழங்குவது மேற்கொள்ளப்படும். (தேவையான போது, குறித்த காணி அமைந்துள்ள பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கும் அழைப்பு விடுவிக்கப்படும்).

3. இதன் பிரகாரம், இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டது, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தினால் முன்வைக்கப்பட்ட எந்த நியதிகளினதும், நிபந்தனைகளினதும் கீழோ, அந்த நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஏற்ப செயற்படுவதைத் தட்டிக் கழிக்கும் எந்தவொரு நபரும் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படலாம்.

4. அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட காணி, வயல் காணியாக இருக்கும் பட்சத்தில், கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தினால் முன்வைக்கப்படுகின்ற முறையான திட்டமிடல்களினதும், சிபாரிசுகளினதும் அடிப்படையில் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

5. அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட காணி, வயல் காணியாக இல்லாத போது, இவ் அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் காணி மீட்புடன் தொடர்புடைய எந்தவொரு அபிவிருத்தித் தொழிற்பாடு தொடர்பிலும் ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்பதாக, குறித்த காணி மீட்பு தொடர்பில் இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமா? என்பது தொடர்பில் காணி அமைந்துள்ள பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி நிறுவனத்தினால் உறுதி செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

6. அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட காணிக்காக, உரிய அபிவிருத்திப் பணிகள் சார்பில் அக்குறித்த அபிவிருத்திப் பணிகளுடன் தொடர்புடைய பிற நிறுவனங்களினதும் சிபாரிசுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

7. இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரினால், சட்டத்தின் பணிகளுக்காக அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும், குறித்த பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், எந்தவொரு நபரினாலும் அதற்கு இடையூறு விளைவிப்பதானது கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படுவதற்கான குற்றமாகும்.

8. இவ் வர்த்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், நியதிகளுக்கும் ஏற்ப செயற்படுவதை மீறும் எந்தவொரு நபரும் இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் கருதப்படுவார்.

9. இது தொடர்பில் தற்போது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், நியதிகளுக்கும், அதே போன்று காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கும், நியதிகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

ஊவா மாகாணம் – மொனறாகலை மாவட்டம்

**அட்டவணை Mo$_{01}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில், மடுல்ல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஊவா – கிழக்கு மாகாண எல்லை;

கிழக்கு : ஊவா – கிழக்கு மாகாண எல்லை ;

தெற்கு : நாமல் ஓயாவும், தும்பந்துறாவ பாலத்திலிருந்து ரத்மல்கஹஎல்ல பாலம் வரையிலான வீதியும் ;

மேற்கு : ஒலிந்த ஓயாவும் ரம்புக்கன் ஓயாவும்.

**அட்டவணை Mo$_{02}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மடுல்ல, பிபிலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மடுல்ல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஊவா – கிழக்கு மாகாண எல்லை;

கிழக்கு : ரம்புக்கன் ஓயாவும் ஒலிந்த ஓயாவும் ;

தெற்கு : ரத்மல்கஹஎல்ல பாலத்திலிருந்து புலுப்பிட்டிய வரையிலான வீதி ;

மேற்கு : புலுப்பிட்டியவிலிருந்து ஊவா – கிழக்கு மாகாண எல்லை வரையிலான கருங்கல் கட்டு வீதி.

**அட்டவணை Mo$_{03}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், பிபிலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லையிலிருந்து புலுப்பிட்டிய வரையிலான பழைய கருங்கல் கட்டு வீதி ;

தெற்கு : புலுப்பிட்டியிலிருந்து பன்மெடில்ல பாலம் வரையிலான வீதி ;

மேற்கு : பன்மெடில்ல ஓயா, தம்பலானே ஓயா மற்றும் ஊவா - கிழக்கு மாகாண எல்லை.

**அட்டவணை Mo$_{04}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், பிபிலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையும், ஊவா - கிழக்கு மாகாண எல்லையும்;

கிழக்கு : தம்பலானே ஓயா, பன்மெடில்ல ஓயா மற்றும் பன்மெடில்ல பாலத்திலிருந்து தல்லந்த சந்தி வரையிலான வீதி ;

தெற்கு : தல்லந்த சந்தியிலிருந்து பண்டிகொட ஊடாக பேராதனை - பதுளை பிரதான வீதி வரையிலான வீதி ;

மேற்கு : பேராதனை - பதுளை பிரதான வீதி.

**அட்டவணை Mo$_{05}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், பிபிலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை;

கிழக்கு : பேராதனை - பதுளை பிரதான வீதி ;

தெற்கு : பிபிலையிலிருந்து வேகம ஊடாக மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான வீதி;

மேற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை.

**அட்டவணை Mo$_{06}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், பிபிலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையும், மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து வேகம ஊடாக பிபிலை வரையிலான வீதி;

கிழக்கு : பிபிலையிலிருந்து மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான பேராதனை - பதுளை பிரதான வீதி ;

தெற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை;

மேற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை.

**அட்டவணை Mo$_{07}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், பிபிலை, மெதகம பிரதேச செயலாளர் பிரிவுகளில், பிபிலை, மெதகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : திக்கல்ரெனயிலிருந்து (பேராதனை - பதுளை பிரதான வீதியிலிருந்து) பண்டிகொட ஊடாக பன்மெடில்ல பாலம் வரையிலான வீதியும், பன்மெடில்ல ஓயாவும்;

கிழக்கு : பன்மெடில்ல ஓயாவும், தகமால ஓயாவும்;

தெற்கு : தகமால ஓயா, தகமால ஓயாவுக்கு அருகிலிருந்து சென்பதிகம ஊடாக யலக்கும்புர வரையிலான வீதி;

மேற்கு : யலக்கும்புரவிலிருந்து பிபிலை, ரதாலியத்த ஊடாக திக்கல்ரென வரையிலான வீதி.

## அட்டவணை $Mo_{08}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மடுல்ல, பிபிலை, பிரதேச செயலாளர் பிரிவுகளில், மடுல்ல, பிபிலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : கல்கமுவயிலிருந்து தும்பந்துறாவ பாலம் வரையிலான வீதியும், நாமல் ஓயாவும்;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை;

தெற்கு : பறகஹகெலே பாலத்திலிருந்து சேனாநாயக்க சமுத்திரம் வரையிலான வீதி, சேனாநாயக்க சமுத்திரம் மற்றும் பன்மெடில்ல ஓயா;

மேற்கு : பன்மெடில்ல ஓயா, பன்மெடில்ல பாலத்திலிருந்து புலுப்பிட்டிய, ரத்துகல ஊடாக கல்கமுவ வரையிலான வீதி.

## அட்டவணை $Mo_{09}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், பிபிலை, மடுல்ல, மெதகம பிரதேச செயலாளர் பிரிவுகளில், பிபிலை, மடுல்ல, மெதகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : பன்மெடில்ல ஓயாவும், சேனாநாயக்க சமுத்திரமும்;

கிழக்கு : சேனாநாயக்க சமுத்திரம், பன்சல் ஓயாவும்;

தெற்கு : பன்சல் ஓயா பாலத்திலிருந்து தகமால ஓயா வரையிலான வீதி;

மேற்கு : தகமால ஓயாவும், பன்மெடில்ல ஓயாவும்.

## அட்டவணை $Mo_{10}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : சேனாநாயக்க சமுத்திரமும், சேனாநாயக்க சமுத்திர எல்லையிலிருந்து பறகஹகெலே பாலம் வரையிலான வீதியும்;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லையும், ஊவா - கிழக்கு மாகாண எல்லையிலிருந்து பல்லெவெல வரையிலான சியம்பலாண்டுவை - அம்பாறை பிரதான வீதியும்;

தெற்கு : பல்லெவெலயிலிருந்து கலவாடிய ஊடாக பன்சல் ஓயா வரையிலான வீதி;

மேற்கு : பன்சல் ஓயாவும், சேனாநாயக்க சமுத்திரமும்.

## அட்டவணை $Mo_{11}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மெதகம, பிபிலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மெதகம, பிபிலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : யலக்கும்புரவிலிருந்து சென்பதிகம ஊடாக கொட்டபொவே வீதிய வரையிலான வீதி;

கிழக்கு : கொட்டபொவே வீதியவிலிருந்து மொனறவான ஊடாக மெதகம சந்தி வரையிலான வீதி ;

தெற்கு : மெதகம சந்தியிலிருந்து இலுக்கும்புர ஊடாக மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான வீதி;

மேற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையும், மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து யலக்கும்புர வரையிலான வீதியும்.

## அட்டவணை $Mo_{12}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மெதகம, மடுல்ல, பிபிலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மெதகம, மடுல்ல, பிபிலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : கொட்டபொவேவீதியவிலிருந்து பட்டதால கந்துற வரையிலான வீதி;

கிழக்கு : பட்டதால கந்துற, தம்பே ஓயா மற்றும் நாமல் ஓயா ;

தெற்கு : நாமல் ஓயா பாலத்திலிருந்து அரட்டுகஸ்வெல ஊடாக மெதகம சந்தி வரையிலான வீதி;

மேற்கு : மெதகம சந்தியிலிருந்து மொனறவான ஊடாக கொட்டபொவேவீதிய வரையிலான வீதி.

## அட்டவணை $Mo_{13}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : பட்டதால கந்துற அருகிலிருந்து பண்டாரவடிய, கல்வாடிய ஊடாக புத்தம வரையிலான வீதி;

கிழக்கு : புத்தம இலிருந்து அம்பகஹப்பிட்டிய ஊடாக பேரப்பிட்டிய வரையிலான வீதி ;

தெற்கு : பேரப்பிட்டிய இலிருந்து கொல்லதெனிய, எல்பிட்டி ஊடாக நாமல் ஓயா பாலம் வரையிலான வீதி ;

மேற்கு : நாமல் ஓயா, தம்ப ஓயா மற்றும் பட்டதால கந்துற.

## அட்டவணை $Mo_{14}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், சியம்பலாண்டுவை பிரதேச செயலாளர் பிரிவில், சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை ;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை ;

தெற்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லையிலிருந்து கல்வெட்டிய ஊடாக கந்தஉட பங்குவ வரையிலான வீதி (சியம்பலாண்டுவை - அம்பாறை பிரதான வீதி வரையிலான வீதி) ;

மேற்கு : கந்தஉட பங்குவ இலிருந்து வறாகம ஊடாக ஊவா - கிழக்கு மாகாண எல்லை வரையிலான வீதி.

## அட்டவணை $Mo_{15}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மெதகம, படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவுகளில், மெதகம, படல்கும்புர பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து அஸ்வெத்தும ஊடாக மெதகம சந்தி வரையிலான வீதி ;

கிழக்கு : மெதகம சந்தியிலிருந்து ரத்தனதெனிய ஊடாக நக்கல வரையிலான வீதி ;

தெற்கு : நக்கல இலிருந்து படல்கும்புர ஊடாக மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான பசறை - மொனறாகலை பிரதான வீதி ;

மேற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை.

## அட்டவணை $Mo_{16}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மெதகம, மடுல்ல மொனறாகலை, படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவுகளில், மெதகம, மடுல்ல, மொனறாகலை, படல்கும்புர பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மெதகம இலிருந்து அரட்டுகஸ்வெல ஊடாக உடுமுல்ல வரையிலான வீதி ;

கிழக்கு : உடுமுல்ல இலிருந்து தம்பகல்ல ஊடாக எல்லெகொன (இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி வரை) வரையிலான வீதியும், எல்லெகொன இலிருந்து மொனறாகலை வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதியும் ;

தெற்கு : மொனறாகலையிலிருந்து முப்பனெ வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதியும், முப்பனெயிலிருந்து நக்கல வரையிலான பசறை - மொனறாகலை பிரதான வீதியும் ;

மேற்கு : நக்கலயிலிருந்து ரத்தனதெனிய, பொல்கஹப்பிட்டிய ஊடாக மெதகம வரையிலான வீதி.

**அட்டவணை Mo17**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : உடுமுல்லயிலிருந்து கொல்லதெனிய ஊடாக பேரப்பிட்டிய வரையிலான வீதி ;

கிழக்கு : பேரப்பிட்டியவிலிருந்து கஹகொல்ல ஊடாக தொம்பகஹவெல வரையிலான வீதி ;

தெற்கு : தொம்பகஹவெலயிலிருந்து பெரலியப்பொல ஊடாக எல்லெகொன வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

மேற்கு : எல்லெகொனயிலிருந்து தம்பகஹ ஊடாக உடுமுல்ல வரையிலான வீதி.

**அட்டவணை Mo18**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மடுல்ல, சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : பேரப்பிட்டியவிலிருந்து வறாகம ஊடாக பல்லெவெல்ல வரையிலான வீதி (சியம்பலாண்டுவை - அம்பாறை பிரதான வீதி ;

கிழக்கு : பல்லெவெல்லயிலிருந்து குரகம்மன ஊடாக சியம்பலாண்டுவை வரையிலான சியம்பலாண்டுவை - அம்பாறை பிரதான வீதி;

தெற்கு : சியம்பலாண்டுவையிலிருந்து நுங்ககஹகிவுல ஊடாக தொம்பகஹவெல வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி ;

மேற்கு : தொம்பகஹவெலயிலிருந்து கஹகொல்ல ஊடாக பேரப்பிட்டிய வரையிலான வீதி.

**அட்டவணை Mo19**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், சியம்பலாண்டுவை பிரதேச செயலாளர் பிரிவில், சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : கந்தஉடபங்குவயிலிருந்து கல்வெட்டியாவ ஊடாக ஊவா - கிழக்கு மாகாண எல்லை வரையிலான வீதி ;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை ;

தெற்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லையிலிருந்து மககலுகொல்ல ஊடாக சியம்பலாண்டுவை வரையிலான பிரதான வீதி ;

மேற்கு : சியம்பலாண்டுவையிலிருந்து கந்தஉடபங்குவ வரையிலான சியம்பலாண்டுவை - அம்பாறை பிரதான வீதி.

**அட்டவணை Mo20**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லவாய பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை, மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து ரந்தெனிய வரையிலான வெல்லவாய - எல்ல பிரதான வீதி ;

கிழக்கு : ரந்தெனியவிலிருந்து வெல்லவாய வரையிலான வெல்லவாய - எல்ல பிரதான வீதி ;

தெற்கு : வெல்லவாயவிலிருந்து மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

மேற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை.

### அட்டவணை $Mo_{21}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், படல்கும்புர, வெல்லவாய புத்தலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், படல்கும்புர, வெல்லவாய புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை ;

கிழக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து ரணுகல்ல, ஹொரபொக்க ஊடாக பெலவத்த வரையிலான (இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி வரை) வீதி ;

தெற்கு : பெலவத்தையிலிருந்து வருணகம ஊடாக வெல்லவாய வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

மேற்கு : வெல்லவாயவிலிருந்து மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான வெல்லவாய - எல்ல பிரதான வீதி.

### அட்டவணை $Mo_{22}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், படல்கும்புர, புத்தலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், படல்கும்புர, புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையும், மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து படல்கும்புர வரையிலான பசறை - மொனறாகலை பிரதான வீதியும் ;

கிழக்கு : படல்கும்புரவிலிருந்து கலகஹகிவுல, முத்துக்கெலியாவ ஊடாக புத்தலை வரையிலான வீதி ;

தெற்கு : புத்தலையிலிருந்துபெலவத்த வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

மேற்கு : பெலவத்தயிலிருந்து ஹொரபொக்க, ரணுகல்ல ஊடாக மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான வீதி.

### அட்டவணை $Mo_{23}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், படல்கும்புர, மொனறாகலை, புத்தலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், படல்கும்புர, மொனறாகலை, புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : படல்கும்புரயிலிருந்து நக்கல வரையிலான பசறை - மொனறாகலை பிரதான வீதி ;

கிழக்கு : நக்கலயிலிருந்து முப்பனே வரையிலான பசறை - மொனறாகலை பிரதான வீதியும், முப்பனெயிலிருந்து குடாஓயா பாலம் வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதியும் ;

தெற்கு : குடாஓயா பாலத்திலிருந்து புத்தலை வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி ;

மேற்கு : புத்தலையிலிருந்து முத்துக்கெலியாவ, கலகஹகிவுல ஊடாக படல்கும்புர வரையிலான வீதி.

### அட்டவணை இல. $Mo_{24}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மொனறாகலை, சியம்பலாண்டுவை, மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளில், மொனறாகலை, சியம்பலாண்டுவை, மடுல்ல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : எல்லெகொனயிலிருந்து இந்திகஸ்எல்ல ஊடாக கொதயான வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி ;

கிழக்கு : கொதயானயிலிருந்து குருஹெல, விலஓயா ஊடாக வத்தேகம வரையிலான வீதி ;

தெற்கு : வத்தேகமயிலிருந்து எத்திமலே வெவ ஊடாக கவுடாவ வரையிலான வீதி;

மேற்கு : கவுடாவயிலிருந்து மொனறாகலை வரையிலான (இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி வரை) வீதியும், மொனறாகலையிலிருந்து எல்லெகொன வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதியும்.

### அட்டவணை $Mo_{25}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், சியம்பலாண்டுவை, பிரதேச செயலாளர் பிரிவில், சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : கொதயானயிலிருந்து மககலுகொல்ல ஊடாக ஊவா - கிழக்கு மாகாண எல்லை வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை ;

தெற்கு : ஹெத ஓயாவும், குடா ஓயாவும் ;

மேற்கு : குடாஓயாலிருந்து குருஹெல ஊடாக கொதயான வரையிலான வீதி.

### அட்டவணை $Mo_{26}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், சியம்பலாண்டுவை, பிரதேச செயலாளர் பிரிவில், சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : குடா ஓயாவும், ஹெத ஓயாவும் ;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை ;

தெற்கு : வில ஓயாவும், மூக்கலன்யாயவிலிருந்து கல்கெட்டி ஆர வரையிலான வீதியும் ;

மேற்கு : கல்கெட்டி ஆரயிலிருந்து வில ஓயா ஊடாக குடாஓயா வரையிலான வீதி.

### அட்டவணை $Mo_{27}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லவாய பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையும், மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து வெல்லவாய வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதியும்;

கிழக்கு : வெல்லவாயவிலிருந்து புதுறுவகல ஊடாக வெஹெரயாய வரையிலான அம்பாந்தோட்டை - வெல்லவாய பிரதான வீதி ;

தெற்கு : வெஹெரயாயவிலிருந்து சிறிபுரகம ஊடாக மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான வீதி ;

மேற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை.

### அட்டவணை $Mo_{28}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய, புத்தலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், வெல்லவாய, புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : வெல்லவாயவிலிருந்து உடவெல ஊடாக குடாஓயா பாலம் வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

கிழக்கு : குடாஓயா ;

தெற்கு : தெமோதரயிலிருந்து (மாணிக்க கங்கை பாலத்திலிருந்து) மகயாய ஊடாக தெலுல்ல வரையிலான வீதி ;

மேற்கு : தெலுல்லவிலிருந்து வெஹெரயாய, நுகயாய ஊடாக வெல்லவாய வரையிலான அம்பாந்தோட்டை - வெல்லவாய பிரதான வீதி.

### அட்டவணை $Mo_{29}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், புத்தலை பிரதேச செயலாளர் பிரிவில், புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : உடவெல குடாஓயா பாலத்திலிருந்து புத்தலை வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

கிழக்கு : புத்தலையிலிருந்து கோன்கெட்டிய, கோனகங்ஆர ஊடாக கோனகங்ஆரகம வரையிலான வீதி ;

தெற்கு : கோனகங்ஆரகமயிலிருந்து தெமோதர பாலம் வரையிலான வீதி;

மேற்கு : குடா ஓயா.

### அட்டவணை $Mo_{30}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், புத்தலை மொனறாகலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், புத்தலை, மொனறாகலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : புத்தலையிலிருந்து மககொடயாய ஊடாக அந்தரமண்டிய வரையிலான (குடாஓயா பாலம் வரை) இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

கிழக்கு : கும்புக்கன் ஓயா ;

தெற்கு : பிந்துங்கடஆர மற்றும் யால தேசிய வனப்பூங்கா எல்லை;

மேற்கு : கோனகங்ஆரவிலிருந்து மெதகம ஊடாக புத்தலை வரையிலான வீதி.

### அட்டவணை $Mo_{31}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மொனறாகலை, புத்தலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மொனறாகலை, புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : அந்தரமண்டியவிலிருந்து (குடாஓயா பாலத்திலிருந்து) முப்பனே ஊடாக ஹுலந்தாவ பாலம் வரையிலான (விகாரமுல்ல வரை) இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி;

கிழக்கு : ஹுலந்தாவ ஓயா ;

தெற்கு : கும்புக்கன் ஓயா;

மேற்கு : கும்புக்கன் ஓயா.

### அட்டவணை $Mo_{32}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மொனறாகலை, சியம்பலாண்டுவை பிரதேச செயலாளர் பிரிவுகளில், மொனறாகலை, சியம்பலாண்டுவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஹுலந்தாவ பாலத்திலிருந்து (விகாரமுல்லையிலிருந்து) மொனறாகலை வரையிலான இரத்தினபுரி - மட்டக்களப்பு பிரதான வீதி, மொனறாகலையிலிருந்து கவுடாவ, எத்திமலே ஊடாக மூக்கலன்யாய வரையிலான வீதி மற்றும் வில ஓயா;

கிழக்கு : ஊவா - கிழக்கு மாகாண எல்லை;

தெற்கு : கும்புக்கன் ஓயா;

மேற்கு : ஹுலந்தாவ ஓயா.

### அட்டவணை $Mo_{33}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், புத்தலை, கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவுகளில், புத்தலை, கதிர்காமம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : யால தேசிய வனப்பூங்காவின் வடக்கு எல்லை;

கிழக்கு : கும்புக்கன் ஓயாவும், ஊவா - தென் மாகாண எல்லையும்;

தெற்கு : ஊவா - தென் மாகாண எல்லையும், யால தேசிய வனப்பூங்கா எல்லையும்;

மேற்கு : யால தேசிய வனப்பூங்கா எல்லை.

### அட்டவணை $Mo_{34}$

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், புத்தலை, கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில், கதிர்காமம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மாணிக்க கங்கை;

கிழக்கு : ஊவா - தென் மாகாண எல்லை;

தெற்கு : கதிர்காமம் சரணாலயத்தின் தெற்கு எல்லை;

மேற்கு : கதிர்காமம் சரணாலய எல்லை.

**அட்டவணை Mo35**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில், கதிர்காமம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மாணிக்க கங்கையும், கதிர்காமம் சரணாலய எல்லையும்;

கிழக்கு : ஊவா - தென் மாகாண எல்லை;

தெற்கு : ஊவா - தென் மாகாண எல்லை;

மேற்கு : ஊவா - தென் மாகாண எல்லையிலிருந்து கதிர்காமம் வரையிலான வீதி.

**அட்டவணை Mo36**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில், கதிர்காமம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : யால தேசிய வனப் பூங்கா எல்லை;

கிழக்கு : யால தேசிய வனப் பூங்கா எல்லையும், மாணிக்க கங்கையும்;

தெற்கு : மாணிக்க கங்கை;

மேற்கு : மாணிக்க கங்கை.

**அட்டவணை Mo37**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய, புத்தலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், வெல்லவாய, புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : தெலுல்லவிலிருந்து மகயாய, தெமோதர ஊடாக கோனகங்ஆரகம வரையிலான வீதி;

கிழக்கு : மாணிக்க கங்கை;

தெற்கு : லுணுகம்வெஹெர தேசிய வனப் பூங்கா எல்லை;

மேற்கு : கிரிந்தி ஓயாவும், குடா ஓயா பாலத்திலிருந்து தெலுல்ல வரையிலான அம்பாந்தோட்டை - வெல்லவாய பிரதான வீதியும்.

**அட்டவணை Mo38**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய, தனமல்வில, கதிர்காமம், புத்தலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், வெல்லவாய, தனமல்வில, கதிர்காமம், புத்தலை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : லுணுகம்வெஹெர தேசிய வனப் பூங்கா எல்லை;

கிழக்கு : லுணுகம்வெஹெர தேசிய வனப் பூங்கா எல்லை;

தெற்கு : லுணுகம்வெஹெர தேசிய வனப் பூங்கா எல்லையும், ஊவா - தென் மாகாண எல்லையும் ;

மேற்கு : லுணுகம்வெஹெர தேசிய வனப் பூங்கா எல்லை.

**அட்டவணை Mo39**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில், கதிர்காமம் பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : லுணுகம்வெஹெர தேசிய வனப் பூங்கா எல்லையும் மாணிக்க கங்கையும் ;

கிழக்கு : மாணிக்க கங்கை பாலத்திலிருந்து ஊவா - தென் மாகாண எல்லை வரையிலான வீதி ;

தெற்கு : ஊவா - தென் மாகாண எல்லை;

மேற்கு : லுணுகம்வெஹெர தேசிய வனப் பூங்கா எல்லை.

**அட்டவணை $Mo_{40}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லவாய பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து சிறிபுரகம ஊடாக வெஹெரயாய வரையிலான வீதி ;

கிழக்கு : வெஹெரயாயவிலிருந்து தெலுல்ல கொலனி ஊடாக குடாஓயா பாலம் வரையிலான அம்பாந்தோட்டை - வெல்லவாய பிரதான வீதி;

தெற்கு : குடாஓயா ;

மேற்கு : குடாஓயா, நாவுஆர மற்றும் மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை.

**அட்டவணை $Mo_{41}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், வெல்லவாய, தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவுகளில், வெல்லவாய, தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : நாவுஆர மற்றும் குடா ஓயா ;

கிழக்கு : கிரிந்தி ஓயா;

தெற்கு : ஊவா - தென் மாகாண எல்லை ;

மேற்கு : மககால வெவ, மககால வெவவிலிருந்து சூரியஆர வரையிலான ஓயா, சூரிய ஆரவிலிருந்து உஸ்கால வரையிலான வீதி, உஸ்கால விலிருந்து கோனகல ஊடாக தல்கஹதிகனெ வரையிலான வீதி மற்றும் தல்கஹதிகனெயிலிருந்து மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை வரையிலான வீதி.

**அட்டவணை $Mo_{42}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஊவா - சப்ரகமுவ மாகாண எல்லையும், மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையும் ;

கிழக்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லை;

தெற்கு : மொனறாகலை - பதுளை மாவட்ட எல்லையிலிருந்து தல்கஹதிகனெ வரையிலான வீதியும், தல்கஹதிகெனெ இலிருந்து ஹம்பெகமுவ பாலம் வரையிலான வீதியும் ;

மேற்கு : ஹம்பெகமுவ பாலத்திலிருந்து அளுத்வெவ ஊடாக வெலிஓயா பாலம் வரையிலான (ஊவா - சப்ரகமுவா மாகாண எல்லை வரை) வீதி.

**அட்டவணை $Mo_{43}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஊவா - சப்ரகமுவ மாகாண எல்லையும், வெலிஓயா பாலத்திலிருந்து கொட்டவெஹெர வரையிலான வீதியும் ;

கிழக்கு : கொட்டவெஹெரவிலிருந்து ஹம்பெகமுவ பாலம் வரையிலான வீதி;

தெற்கு : ஹம்பெகமுவ பாலத்திலிருந்து உடவளவை சரணாலய எல்லை வரையிலான மவுஆர மற்றும் மவுஆரவிலிருந்து ஊவா -சபரகமுவ மாகாண எல்லை வரையிலான உடவளவை சரணாலய வீதி ;

மேற்கு : ஊவா - சபரகமுவ மாகாண எல்லை.

**அட்டவணை $Mo_{44}$**

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : ஹம்பெகமுவ பாலத்திலிருந்து தல்கஹதிகனெ வரையிலான வீதி ;

கிழக்கு : தல்கஹதிகனெயிலிருந்து உஸ்கால வரையிலான வீதி;

தெற்கு : உஸ்காலவிலிருந்து இந்துனில்புர வரையிலான வீதி ;

மேற்கு : இந்துனில்புரவிலிருந்து மவுஆர வரையிலான உடவளவை சரணாலய எல்லை மற்றும் மவுஆர.

### அட்டவணை Mo45

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், தனமல்வில, செவனகலை பிரதேச செயலாளர் பிரிவுகளில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : உடவளவை சரணாலய எல்லை ;

கிழக்கு : உடவளவை சரணாலய எல்லை;

தெற்கு : உடவளவை சரணாலய எல்லை ;

மேற்கு : ஊவா – சபரகமுவ மாகாண எல்லை.

### அட்டவணை Mo46

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், செவனகலை பிரதேச செயலாளர் பிரிவில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : உடவளவை சரணாலய எல்லை ;

கிழக்கு : உடவளவை சரணாலய எல்லையிலிருந்து தளுக்கெட்டிகல ஊடாக தந்தும சந்தி வரையிலான வீதி;

தெற்கு : தந்தும சந்தியிலிருந்து ஊவா – சபரகமுவ மாகாண எல்லை வரையிலான வீதியும், ஊவா – சபரகமுவ மாகாண எல்லையும் ;

மேற்கு : ஊவா – சபரகமுவ மாகாண எல்லை.

### அட்டவணை Mo47

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், செவனகலை பிரதேச செயலாளர் பிரிவில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : உடவளவை சரணாலய எல்லை ;

கிழக்கு : உடவளவை சரணாலய எல்லையிலிருந்து தெமட்டபெலெஸ்ஸ சந்தி வரையிலான வீதி;

தெற்கு : தெமட்டபெலஸ்ஸ சந்தியிலிருந்து தந்தும சந்தி வரையிலான வீதி;

மேற்கு : தந்தும சந்தியிலிருந்து தலுக்கெட்டிய ஊடாக உடவளவை சரணாலய எல்லை வரையிலான வீதி.

### அட்டவணை Mo48

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், செவனகலை பிரதேச செயலாளர் பிரிவில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : தந்தும சந்தியிலிருந்து தெமட்டபெலஸ்ஸ சந்தி வரையிலான வீதி ;

கிழக்கு : தெமட்டபெலெஸ்ஸ சந்தியிலிருந்து கிரிஇப்பன்வெவ குளக்கட்டு ஊடாக ஊவா தென் மாகாண எல்லை வரையிலான வீதி ;

தெற்கு : ஊவா – தென் மாகாண எல்லை;

மேற்கு : ஊவா – சப்பிரகமுவ மாகாண எல்லை.

### அட்டவணை Mo49

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், செவனகலை, தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவுகளில், தனமல்வில பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பின்வரும் எல்லைகளுள் அமைந்த தாழ்நில, சதுப்பு நில, சேற்று நில அல்லது தரிசு நிலப் பிரதேசம்.

வடக்கு : உடவளவை சரணாலய எல்லையும், இந்துனில்புரவிலிருந்து ரோஹனபுர ஊடாக சூரியஆர வரையிலான வீதியும் ;

கிழக்கு : சூரியஆரவிலிருந்து மககாலவெவ வரையிலான ஓயா, மககால வெவ மற்றும் ஊவா - தென் மாகாண எல்லை ;

தெற்கு : ஊவா – தென் மாகாண எல்லை;

மேற்கு : ஊவா – தென் மாகாண எல்லையிலிருந்து கிரிஇப்பன்வெவ குளக்கட்டு ஊடாக உடவளவை சரணாலய எல்லை வரையிலான வீதி.

09-460/1

## 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனச் சட்டம்

*2 (ஆ) 1 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2(ஆ)1 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டுடன், ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், இங்கு கீழே அட்டவணை இல. $B_1$ தொடக்கம் $B_{41}$ வரை விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை, தாழ்நில, சதுப்புநில, தரிசுநில அல்லது சேற்றுநில ஒதுக்கங்களாக நிச்சயப்படுத்தி பிரகடனம் செய்கின்றேன். இப் பிரதேசத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் போது, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத் தாபனத்தினால் விதிக்கப்பட்ட கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் கட்டுப்பட்டு செயற்படுதல் வேண்டும்.*

மஹிந்த ராஜபக்ஷ,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர்.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 03,
2014, ஓகத்து 21.

### நிபந்தனைகளும் வரையறைகளும்

*1. இவ்வறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு பிரதேசத்தினுள் உள்ள ஏதேனுமொரு காணியை மீட்பதற்கு (நிரப்புவதற்கு) அல்லது அபிவிருத்தி செய்வதற்கு, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் எழுத்து மூல அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இதற்கு, கூட்டுத்தாபனத்தினால் விநியோகிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தினூடாகவே இந்த எழுத்துமூல கோரிக்கை முன்வைக்கப்படுதலும் வேண்டும்.*

